பாண்டி சீரீஸ் 15.

ஆதித்யஹ்ருதய

ஸ்தோத்திரம்.

கல்லிடைக்குறிச்சி

ஸ்ரீமச்சந்திரபுரம் பண்டித சிரோமணி

எல். காசிவிஸ்வநாத சஸ்திரிகளால்,

மொழிபெயர்க்கப்பட்டது.

ஜெனரல் டிரேடிங் கம்பெனி,

565, பைகிராப்ட்ஸ்ரோடு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

காபிரைட்] 1937 [அணா 2

Scanned by CamScanner

வாங்கத்தவறதீர்கள் ! வாங்கத்தவறதீர்கள் !!

திருப்புகழ் முருகன் தர்மத்திற்காக

பக்த

திருப்புகழ்மணி அவர்களால்

பாடப்பட்ட

திருப்புகழ் பாடல்களை

கிராமபோன் ரிகார்டுகளில்

கேட்காமல் ஏமாந்து விடாதீர்கள்.

ஒவ்வொரு வீட்டிலும்

இருக்கவேண்டியது அவசியம்.

ஆர்டரை இன்றே ரிஜிஸ்டர் செய்யுங்கள்.

எங்களிடத்தில் கிராமபோன்

மிஷின்களும் கிடைக்கும்.

பி. டி. பாணி கம்பெனி,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

" ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரம் "

அஸ்ய ஸ்ரீ ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ர
மஹாமந்த்ரஸ்ய அகஸ்த்யோ பகவான் ருஷிஃ|
அனுஷ்டுப்ச்சந்த ஃ |
ஸ்ரீ ஸூர்யநாராயணோதேவதா ||

நிரஸ்தாஶேஷவிக்னதயா ஸர்வத்ர ஜய
ஸித்யர்த்தே, வினியோக ஃ||

" த்யானம் "

ஜயதி ஜயதி சூர்யஸ் ஸப்தலோகைகதீப ஃ
கிரணம் ருதித்தாப ஃ ஸர்வதுக்கஸ்ய ஹர்தா |
அருணகிரணகம்யஶ் சாதிராதித்யமூர்தி ஃ
பரமபரம திவ்ய ஃ பாஸ்கரஸ்தம் நமாமி ||

(பதவுரை) ஸப்தலோகைகதீப ஃ = ஏழு
உலகங்களுக்கு முக்கிய தீபம் போன்றவரும்

கிரணம்ருதிதாபஃ = கிரணங்களால் போக்
கடிக்கப்பட்ட தாபத்தை உடையவரும்,
ஸர்வதுக்கஸ்ய = எல்லாவித துக்கத்தை,
ஹர்த்தா = போக்கடிப்பவரும், அருண கிரண
கம்யஃ = அருணனுடைய கிரணங்களால்
அறியக்கூடியவரும், ஆதிஃ = முதன்மையான
வரும், பரம பாஸ்கரஃ = மிகவும்
ப்ரகாசிக்கிறவரும், பாஸ்கரஃ = ஒளியை
பரவசெய்கிறவருமான, ஸூர்யஃ = யாதொரு
சூர்யன், ஆதித்யமூர்த்திஃ = சூர்யநாராயண
மூர்த்தியாக, ஜயதி ஜயதி = விளங்கு
கிறாரோ, தம் = அந்த பகவானை, நமாமி =
நமஸ்காரம் செய்கிறேன்.

ததோ யுத்த பரிஶ்ராந்தம் ஸமரே சிந்தயா
ஸ்த்திதம்,

ராவணம் சாக்ரதோத்ருஷ்ட்வா யுத்தாய
ஸமுபஸ்த்திதம் ||

தைவதைஶ்ச ஸமாகம்ய த்ரஷ்டு மப்யா
கதோரணம் |

உபகம்யாப்ரவீத் ராமம் அகஸ்த்யோ பக
வான், ரிஷிஃ||

(ப - ரை) ததஃ = பிறகு, ரணம் =
யுத்தத்தை, த்ரஷ்டும் = பார்ப்பதற்கு,
தைவதைஶ்ச = தேவதைகளோடு, ஸமா
கம்ய = சேர்ந்து, அப்யாகதஃ = வந்த, பக
வான் = ஷாட்குண்ய பரிபூர்ணரான, அகஸ்
த்யஃ = அகஸ்திய ரென்ற, ரிஷிஃ = முனிவர்,
யுத்தபரிஶ்ராந்தம் = யுத்தத்தில் களைப்
படைந்தவனும், யுத்தாய = யுத்தம் செய்வ
தற்காக, அக்ரதஃ = முன்னே, ஸமுபஸ்த்தி
தம் = ஸமீபத்தில் இருக்கிறவனுமான, ராவ
ணம் ச = ராவணனையும், ஸமரே = யுத்தத்
தில், சிந்தயா = கவலையுடன், ஸ்த்திதம் =

Scanned by CamScanner

இருக்கிற, ராமம் = ராமரையும் த்ருஷ்ட்வா = பார்த்து, உபகம்ய = அடைந்து, அப்ரவீத் = சொன்னர்.

(தாத்பர்யம்.) ராமரும் ராவணனும் ஒயாமல் யுத்தம் செய்ததால் இராவணன் சிறிது இளைப்படைந்து, சிரமபரிஹாரஞ் செய்து மறுபடியும் யுத்தம் செய்யவந்த ராவணனையும், பலிஷ்டனான ராவணனை எப்படி ஸம்ஹரிப்பது என்ற கவலையுடனிருக்கிற ராமரையும் அகஸ்தியர் சமஸ்த தேவதைகளுடன் பார்த்து, ராவணனை இப்போதே ஜயிக்கப்போகிறாய் கவலைப்படாதே, உன்வீர்யம் விருத்தி அடைவதற்காக ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரத்தினால் சூரியபகவானை உபாஸிக்கவு மென்று எண்ணங்கொண்டு ராமரை அணுகி இவ்விதம் சொன்னர்.

ராம ராம மஹோபாஹோ ஶ்ருணு குஹ்யம் ஸநாதனம் |

யேந ஸர்வாநரீந் வத்ஸ ஸமரே விஜயிஷ்யஸி ||

(பதம்) மஹாபாஹோ = நீண்ட கைகளையுடையவனே, வத்ஸ = குழந்தாய், ராம ராம = ஹேராம, ஹேராம, யேந = எதினால், ஸமரே = யுத்தத்தில், ஸர்வாநரீன் = எல்லா சத்துருக்களை, விஜயிஷ்யஸி = ஜயிப்பாயோ, ஸநாதனம் = புராதனமான (அப்போர்க்கொத்த) குஹ்யம் = ரஹஸ்யத்தை, ஶ்ருணு = கேள்.

(தா - ம்) நீண்ட கைகளை உடைய ஓ ராம, ஓ குழந்தாய் நீ எதினால் எல்லா சத்துருக்களையும் வெல்லுவாயோ அப்போர்க்கொத்த மிகவும் பழமையான ரஹஸ்யத்தை சொல்லுகிறேன் அதை கேள்.

ஆதித்யஹ்ருதயத்தின் பெருமையை இரண்டு ஸ்லோகங்களால் கூறுகிறார்.

Scanned by CamScanner

ஆதித்ய ஹ்ருதயம் புண்யம் ஸர்வசத்ரு
விநாசனம் |
ஜயாவஹம் ஜபேந் நித்யம் அக்ஷய்யம்
பரமம் சிவம்
ஸர்வமங்கள மாங்கள்யம் ஸர்வபாப
ப்ரணாசனம் |
சிந்தாசோக ப்ரசமனம் ஆயுர் வர்த்தன
முத்தமம் ||

(ப - ரை) புண்யம் = புண்யத்தை உண்டு பண்ணுகிறதும், ஸர்வசத்ருவிநாசனம் = எல்லா சத்துருக்களை நாசம் செய்கின்றதும், ஜயாவஹம் = ஜயத்தை அளிக்கின்றதும், நித்யம் = எப்பொழுதும், அக்ஷய்யம் = அழிவில்லாததும், பரமம் = சிரேஷ்டமானதும், சிவம் = மங்களகரமானதும், ஸர்வமங்கள மாங்கள்யம் = எல்லாமங்கள வஸ்துக்களுக்கும் மங்களம்போன்

றதும், ஸர்வபாபப்ரணாசனம் = எல்லாவித பாபங்களை தொலைக்கின்றதும், சிந்தாசோக ப்ரசமனம் = மனக்கவலையை நீக்குகின்றதும், ஆயுர்வர்த்தனம் = ஆயுளை விருத்தி பண்ணுகிறதும், உத்தமம் = மேன்மையானதுமான, ஆதித்யஹ்ருதயம் = சூரியனுடைய மனதை திருப்திசெய்கின்ற, ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரத்தை, ஜபேத் = ஜபிக்கவேண்டும் "ஆதித்யஹ்ருதயமென்பதின் பொருள். ஆதித்ய - சூரிய மண்டலத்தினுடைய, ஹ்ருதயம் - மத்தியிலிருக்கிற பரமாத்மா அல்லது ஆதித்ய - சூரியனுடைய, ஹ்ருதயம் - மனஸை திருப்திசெய்விக்கின்ற ஸ்தோத்திரம்."

(தா - ம்) ஓமா ஆதித்யஹ்ருதய மென்ற ஸ்தோத்திரத்தை நீ ஜபிக்கவேண்டும், அது ஜபிக்கிறவர்களின் பாபங்களை அகற்றி மனிதனை புனிதமாக செய்கின்றது, எல்லா சத்துருக்களை

Scanned by CamScanner

வெல்லும்படி செய்யும், ஜயத்தையும் கொடுக்கும், வேதத்தைப் போல் அழிவில்லாதது, ஒரு காலும் அழிவில்லாமல் மிகவும் மங்களத்தை அளிக்கும், எல்லா மங்கள வஸ்துக்களுக்கும் மங்களமாயுள்ளதும், எல்லாவித பாபங்களையும் நசிக்கும்படி செய்யும், மனக்கவலையை நீக்கும், தீர்க்காயுளை கொடுக்கும், எல்லாவித ஸ்தோத்திரங்களை காட்டிலும் மிகவும் சிறந்தது. ஆகையால் நீ அந்த ஸ்தோத்திரத்தை ஜபிக்கவும்.

ஆதித்யனை குறித்து ஸ்தோத்திரம் செய்கிறார்.

ரச்மிமந்தம் · ஸமூத்யந்தம் தேவாஸுர
நமஸ்க்ருதம் |
பூஜயஸ்வ விவஸ்வந்தம் பாஸ்கரம் புவ
னேச்வரம் ||

(ப - ரை) ரச்மிமந்தம் = ஞானரூபமாயும் பிரகாசரூபமாயுள்ள கிரணங்களை உடை

யவரும், ஸமூத்யந்தம் = புதுபுதிதாய் உதிக்கிறவர்போன்றவரும், ஸ்ருஷ்டி முதலியவைகளில் முயற்சியுடையவரும், தேவாஸுர நமஸ்க்ருதம் = தேவர்களாலும் அஸுரர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரும், விவஸ்வந்தம் = எப்போதும் விவஸு என்ற மணியை தரிக்கிறவரும் அல்லது தனது காந்தியால் மற்றவைகளை மறைப்பவனும், பாஸ்கரம் = காந்தியை பரவசெய்கிறவனும், புவனேச்வரம் = உலகத்துக்கு ஈஸ்வரருமான (சூர்யனை) பூஜயஸ்வ = பூஜை செய்.

(தா - ம்) பஞ்சேந்திரியங்கள் மூலமாய் அனேக ஞானரச்மி உடையவரும், சங்கதிறமுள்ள கிரணங்களை உடையவரும், தான் உதித்து அவரவர்களின் கர்மாக்களை செய்ய தூண்டுகிறவரும், ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களில் முயற்சி செய்கின்றவரும், தேவர்களாலும் அஸுரர்களாலும் நமஸ்கரிக்கப் பட்டவரும், எப்போதும்

Scanned by CamScanner

விவஸ்வான்என்ற ஓர் மணிவிசேஷத்தை தரிக்கிற வரும், தனது ஒளியால் எல்லா ஒளியை மறைக் கும்படி செய்பவரும் பதார்த்தங்களின் ஸ்வரூபத் தை தெரிவிக்க தனது ஒளியை பரவசெய்கிற வரும், தனது கிரணங்கள் மூலமாய் மழையைவர் ஷித்து உலகத்தை காப்பாற்று கிறவருமான சூரியனை பூஜிக்கவும்.

எல்லா தேவதைகளைக்காட்டிலும் மேலான வரென்பதை நிரூபிக்கிறார்.

ஸர்வதேவாத்மகோ ஹ்யேஷ தேஜஸ்வீ
ரச்மிபாவநஃ|
ஏஷ தேவாஸுரகணாந் லோகாந் பாதி
கபஸ்திபிஃ||

(ப - ரை) ஏஷஃ = இந்த சூரியபகவான், சூரிய மண்டலத்திலிருக்கும் பரமாத்மா, ஸர்வதேவாத்மகஃ = ஸமஸ்த தேவதைகளின் ஆத்மஸ்வரூபமுள்ளவர், தேஜஸ்வீ = அதிக

தேஜஸ்உடையவர், ரச்மிபாவனஃ = தனது கிரணங்களால் சிலாகிக்க தகுந்தவர் அல்லது ஞானரச்மியால் யோகிகளை பிரும்மலோகத் தை அடையும்படி செய்கிறவர், தேவாஸுர கணாந் = தேவாஸுர கூட்டங்களையும், லோகான் = எல்லா உலகங்களையும், கபஸ் திபிஃ = கிரணங்களால், பாதி = ரக்ஷிக்கிறார்.

(தா - ம்) இந்த சூரியபகவான் ஸமஸ்த தேவாதாஸ்வரூபி, எல்லா வஸ்துக்களை விளக்கக் கூடிய அதிக ஒளியை உடையவர். தனது கி ரணங்களால் சிலாகிக்க தகுந்தவர். தேவலோகம் முதலிய எல்லா உலகத்தையும் தனது கிரணங் களால் காப்பாற்றுகிறார். அதாவது, சூரியனை குறித்து அக்னியில் ஹோமம் செய்வது சூரி யனை அடைகிறது. சூரியனிடமிருந்து மழை உண் டாகிறது, மழையால் தான்யம் முதலியவைகள் உண்டாகின்றன. புரோடாசம் முதலியவை களால் தேவர்கள் முதலிய எல்லா ஜனங்களும் காப்

Scanned by CamScanner

அசுவினீ தேவதைகளாகவும், மருதः = மருத் கணங்களாகவும், மனுः = மனுசக்கரவர்த்தி யாகவும், வஹ்னிः = அக்கினியாகவும், ப்ர ஜாப்ராணः = பிராணிகளின் ப்ராணவாயுவா கவும், ருதுகர்த்தா = வஸந்தம்முதலிய ஆறு ருதுக்களை உண்டுபண்ணுகிறவராகவும், ப்ர பாகரः = சூரியனாகவும் (ஆகிறார்).

(தா - ம்) இவரே, பிரும்மாவாகவும், விஷ்ணுவாகவும், சிவனாகவும், சுப்ரமண்யராகவும், ஸப்ரஜாபதிகளாகவும், இந்திரனாகவும், குபேரனாகவும், ம்ருத்யுவாகவும், யமனாகவும், சந்திரனாகவும், வருணனாகவும், பித்ருக்களாகவும், அஷ்ட வஸுக்களாகவும், ஸாத்யர்களாகவும், அசுவினி தேவதைகளாகவும், மருத்கணங்களாகவும், மனு சக்ரவர்த்தியாகவும், அக்னியாகவும், பிராணி களின் பிராணவாயுவாகவும், ஆறு ருதுக்களை உண்டுபண்ணுபவராகவும், சூரியனாகவும் ஆகி

ரூர். இவரே எல்லாவர்களுக்கும் அந்தராத்மா வாக உள்ளவர்.

இப்போது ஆதித்யஹ்ருதயமென்ற ஸ்தோத்திரத்தை உபதேசிக்கிறார்.

ஆதித்யः ஸவிதா ஸூர்யः ககः பூஷா
கபஸ்திமான் |
ஸுவர்ணஸத்ருஶோ பானுர் ஹிரண்ய
ரேதா, திவாகரः||

(ப - ரை) ஆதித்யः = அதிதியின் புத்ரன், ஸவிதா = ஜனங்களை படைக்கிறவர், ஸூர்யः = அவரவர்களின் கர்மாக்களை செய்விப்பிக் கிறவர், ககः = ஆகாயத்தில் சஞ்சரிப்பவர், பூஷா = உலகங்களை போஷிப்பவர், கபஸ்தி மான் = கிரணங்களை உடையவர், ஸுவர் ணஸத்ருஶः = சுவர்ணத்துக்கு சமான மான வர்ணமுடையவர், பானுः = எங்கும் பிரகாசிக்கிறவர், ஹிரண்யரேதாः = தங்க

Scanned by CamScanner

மயமான பிரும்மாண்டத்தை படைக்கிறவர் திவாகரः = பகலில் ஜனங்களை கார்யத்தில் செய்விக்கிறவர், அறிவை உண்டுபண்ணுகிறவர்.

ஹரிதஶ்வஸ் ஸஹஸ்ரார்சிः ஸப்தஸப்திர் மரீசிமான் |

திமிரோன்மதனஶ் ஶம்புஸ் த்வஷ்டா மார்தாண்ட அம்ஶுமான் ||

(ப - ரை) ஹரிதஶ்வः = திக்குகளில் எங்கும் வியாபிக்கிறவர் அல்லது பச்சை குதிரையை உடையவர், ஸஹஸ்ரார்சிः = ஆயிரங்கிரணங்களை உடையவர், ஸப்தஸப்திः = ஸப்தியென்னும் குதிரையை உடையவர், மரீசிமான் = வெகு ஒளியையுடைய கிரணங்களை யுடையவர் அல்லது சத்ருக்களை வெல்லும் சக்ராயுத முடையவர், ஶம்புः = சுகத்தை அளிக்கிறவர், த்வஷ்டா = எல்லாவற்றை

யு மழிப்பவர், மார்த்தாண்டः = எல்லாவற்றையும் ஸம்ஹரித்த பிறகு உலகங்களை படைக்க மறுபடியும் உண்டாக்குகிறவர், அம்ஶுமான் = எங்கும் வியாபிக்கும் ஒளி உடையவர்.

ஹிரண்யகர்பஶ் ஶிஶிரஸ் தபனே பாஸ்கரோ ரவிः|

அக்னிகர்போ திதேः புத்ரஶ் ஶங்கஸ் ஶிஶிரநாஶநः||

(ப - ரை) ஹிரண்யகர்பः = சுவர்ணமயமான பிரும்மாண்டத்திலிருப்பவர் அல்லது எல்லா உலகங்களின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்கிறவர், ஶிஶிரः = குளிர்ந்தவர் அதாவது சுகசுவபாவத்தை உடையவர், தபனः = தபிக்கசெய்கிறவர் அல்லது சுவயமாகவே ஜ்வரியமுடையவர், பாஸ்கரः = ஒளியை பரவசெய்கிறவர், ரவிः = ஸ்தோத்

Scanned by CamScanner

திரம் செய்யப்படுகிறவர், அக்னிகர்பः= பகலில் அக்னியை மத்தியிலுடையவர், அதிதேः புத்ரः = அதிதியின் புதல்வர், ஶங்கः = தானுகவே ஶமனமடைகிறவர் அல்லது பரமானந்தஸ்வரூபியும் ஆகாயம் போல் எங்கும் வியாபிக்கிறவர், ஶிஶிரநா ஶநः = பனியை நாசஞ்செய்கிறவர்.

வ்யாமநாதஸ் தமோபேதீ ருக்யஜுஷ் ஸாமபாரகः |

கனவ்ருஷ்டி ரபாம்மித்ரோ விந்த்யவீதீப்ல வங்கமः ||

(ப - ரை) வ்யோமநாதः = ஆகாயத்தை படைத்தவர், ஆகாயத்துக்கரசன், தமோ பேதீ = இருளை போக்கடிக்கிறவர் அல்லது பக்தர்களின் அஞ்ஞானத்தை விலக்குகிறவர், ருக்யஜுஸ்ஸாமபாரகः = ருக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம் இவைகளின் தரையை

யடைந்தவர், கனவ்ருஷ்டிः = அதிக மழை யை பெய்யும்படி செய்பவர், அபாம்மித்ரः = ஜலங்களுக்கு மித்ரர் அல்லது சமுத்திரத் தில் சயனிக்கிறவர், விந்த்யவீதி ப்லவங்கமः = (தக்ஷிணயனத்தில்) விந்திய மலைவழியாய் செல்லுகிறவர்.

ஆதபீ மண்டலீ ம்ருத்யுःபிங்களஸ் ஸர்வ தாபனः |

கவிர் விஶ்வோ மஹாதேஜா ரக்தஸ்ஸர்வ பவோத்பவः ||

(ப - ரை) ஆதபீ = வெயிலை உடையவர், மண்டலீ = வட்டமான பிம்பத்தை உடை யவர், ம்ருத்யுः = விரோதிகளை வெல்லுகிற வர், பிங்களः = (உதயகாலத்தில்) பொன் நிறமுடையவர், ஸர்வதாபனः = எல்லாவற் றையும் தபிக்கசெய்கிறவர், கவிः = சாஸ்தி ரங்களை இயற்றியவர். விஶ்வः = தானே உல

Scanned by CamScanner

கத்தை படைத்து உலகத்திலுள் புகுந்தவர், மஹாதேஜாஃ = அதிக தேஜஸ் உடையவர், ரக்தஃ = எல்லாவரிடத்திலும் அன்புள்ளவர், ஸர்வபவோத்பவஃ = எல்லாவற்றின் உற்பத்திக்கு காரணமாயுள்ளவர்.

நக்ஷத்ரக்ரஹ தாராணு அதிபோ விஶ்வபாவனஃ |
தேஜஸமபி தேஜஸ்வீ, த்வாதஶாத்மன், நமஸ்து தே ||

(ப - ரை) நக்ஷத்ர க்ரஹ, தாராணும் = அசுவினி முதலிய நக்ஷத்திரங்கள், நவக்கிரஹங்கள் சாதாரண நக்ஷத்திரங்கள் இவைகளுக்கு அதிபஃ = தலைவர், விஶ்வபாவனஃ = உலகத்தை ஸ்தாபிக்கிறவர், தேஜஸாமபி = அக்னி முதலிய தேஜஸ்களுக்குள், தேஜஸ்வீ = அதிக ஒளியுள்ளவர், த்வாதஶாத்மன் = பன்னிரெண்டு மூர்த்தி உடையவரே, தே = உமக்கு, நமஃ = நமஸ்காரம், அஸ்து = இருக்கட்டும்

10. 15. (தா - ம்) அதிதியின் புதல்வரும். ஜனங்களை படைக்கிறவரும், அவரவர்களின் கர்மாக்களை செய்விப்பிக்கிறவரும், ஜனங்களின் உபாகாரத்திற்காக எப்போதும் ஆகாயத்தில் சஞ்சரிக்கிறவரும், கிரணங்கள் மூலமாய் ஜலத்தை இழுத்து மழையை பெய்யும்படிசெய்து உலகத்தை காப்பாற்றுகிறவரும், மேன்மையான கிரணங்களை உடையவரும், தங்கவர்ணமுடையவரும், எங்கும் பிரகாசிக்கிறவரும், பொன்மயமான பிரும்மாண்டத்தை படைக்கின்றவரும், பகலை உண்டாக்கி ஜனங்களை தன் தன் காரியங்களில் ஏவுகிறவரும் அல்லது அறிவை உண்டு பண்ணுகிறவரும், (11) திக்குகளில் எங்கும் வியாபிக்கிறவரும் ஆயிரங்கிரணங்களுடையவரும், ஸப்த என்கிற குதிரை உடையவரும், வெகு ஒளியையுடைய கிரணங்களை உடையவரும், சுகத்தை அளிப்பவரும், எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவரும், ஸம்ஹரித்தபிறகு உலகத்தை உண்டாக்க

Scanned by CamScanner

அதில் தோன்றுகிறவரும், எங்கும் வியாபிக்கும் ஒளியை யுடையவரும், (12) சுவர்ணமயமான பிரும்மாண்டத்தி லிருப்பவரும் எல்லா உலகத் தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களை செய் கின்றவரும், தாபத்ரயத்திலுல் தபிக்கிறவர்க ளின் தாபத்தை போக்கடித்து குளிரச்செய்கிற வரும், சுகசுவபாவமுடையவரும், எங்கும் ஒளி யை பரவச்செய்கிறவரும், அனைவராலும் ஸ்துதிக் கப்படுகிறவரும், பகலில் அக்னியை கர்பத்தி லுடையவரும், அதிதிக்கு புதல்வரும், சாயங்கா லத்தில் தானுகவே ரூபமடைகிறவரும், பரமா னந்தஸ்வரூபியாயும், ஆகாயம்போல் எங்கும் வியா பிக்கிறவரும், பனியை போக்கடிக்கிறவரும், (13) ஆகாயத்திற்கு அரசனும், இருளை போக்கடிக்கிற வரும், பக்தர்களின் அஞ்ஞானத்தை விலக்குகிற வரும், ருக், யஜுஸ், ஸாமம் இம்மூன்று வேதங் களின் கரையை கண்டவரும், அதிக மழையை பெய்யும்படி செய்கிறவரும், ஜலங்களுக்கு மித்ர னும், தக்ஷிணயனத்தில் விந்திய மலைவழியாய்

செல்லுகிறவரும், (14) வெயிலை உடையவரும் வட்டமான பிம்பத்தை உடையவரும், விரோதி களை வெல்லுகிறவரும், உதயகாலத்தில் பொன் நிறமுடையவரும், எல்லாவற்றையும் தபிக்க செய்கிறவரும், சாஸ்திரங்களை இயற்றியவரும், உலகத்தினுட்புகுந்தவரும், அதிக தேஜஸ்ஸுடைய வரும், எல்லாவிடத்திலும் அன்புள்ளவரும், எல்லாவற்றின் உற்பத்திக்கு காரணமாயுள்ளவ ரும், (15) அஸ்வினி முதலிய நக்ஷத்திரங்கள், நவக்ரஹங்கள், சாதாரண நக்ஷத்திரங்கள் இவை களுக்கு தலைவராயிருப்பவரும், ரக்ஷிப்பதிலுல் உலகத்தை ஸ்தாபிப்பவரும், அக்னி முதலிய ஒளிகளுக்குள் அதிக ஒளியுள்ளவரும், பன்னி ரெண்டு மூர்த்தியாயுமுள்ள உமக்கு அனேக நமஸ்காரம்.

நமஃ பூர்வாய கிரயே பஶ்சிமே கிரயே நமஃ|
ஜ்யோதிர்கணானும் பதயே திநாதிபதயே
நமஃ ||

Scanned by CamScanner

(ப - ரை) பூர்வாய = கிழக்கு திக்கிலுள்ள, கிரயே = மலையிலிருக்கும் (உமக்கு), நமஃ = நமஸ்காரம், பஶ்சிமே = மேற்கு திக்கிலுள்ள கிரயே = மலையிலிருக்கும் (உமக்கு), நமஃ = நமஸ்காரம், ஜ்யோதிர்கணனும் = ஒளிகளின் கூட்டங்களுக்கு, பதயே = தலைவராயும், திநாதிபதயே = பகலுக்கு அதிபதியுமான் (உமக்கு), நமஃ = நமஸ்காரம்.

(தா - ம்) உதயபர்வதத்திலிருக்கும் உமக்கு நமஸ்காரம், அஸ்தமன பர்வதத்திலிருக்கும் உமக்கு நமஸ்காரம், ஒளிகளின் கூட்டங்களுக்கு அதிபதியான உமக்கு நமஸ்காரம், பகலுக்கு அதிபதியான உமக்கு நமஸ்காரம்.

ஜயாய ஜயபத்ராய ஹர்யஶ்வாய நமோ நமஃ |

நமோநமஸ் ஸஹஸ்ராம்ஶோ ஆதித்யாய நமோ நமஃ ||

(ப - ரை) ஜயாய = ஜயசீலரும், ஜயபத்ராய = ஜயம், மங்களம், இவைகளை கொடுப்பவரும், ஹர்யஶ்வாய = பச்சைக் குதிரையுடையவருமான (உமக்கு), நமோநமஃ = நமஸ்காரம், நமஸ்காரம், ஸஹஸ்ராம்ஶோ = ஆயிரங்கிரணங்களுடையவரே, ஆதித்யாய = அதிதியின் புதல்வரான (உமக்கு), நமோ நமஃ = நமஸ்காரம், நமஸ்காரம்.

(தா - ம்) ஜயசீலரும், ஜயம், மங்களம் இவைகளை கொடுப்பவரும், பச்சைக்குதிரையுடையவருமான் உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். ஆயிரம் கிரணங்களை உடைய, அதிதியின் புதல்வரான உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

குறிப்பு :—இரண்டுதடவை நமஸ்காரம் சொல்வது தனது அதிக ஆதரவை காண்பிக்கிறது.

Scanned by CamScanner

நம உக்ராய வீராய ஸாரங்காய நமோ நமஃ||

நமஃ பத்மப்ரபோதாய மார்தாண்டாய நமோ நமஃ |

(ப - ரை) உக்ராய = பயங்கரராயும், வீராய = பராக்ரமமுள்ளவருமான (உமக்கு) நமஃ = நமஸ்காரம் ஸாரங்காய = வெகு சீக்கிரம் செல்லுகிற அல்லது, காலசக்ரத்தை போகச் செய்கிற (உமக்கு) நமோ நமஃ = நமஸ்காரம், நமஸ்காரம், பத்மப்ரபோதாய = தாமரையை மலரச்செய்கிற (உமக்கு), நமஃ = நமஸ்காரம், மார்தாண்டய = எல்லாவற்றையும் அழித்து மறுபடியும் உண்டுபண்ணுகின்ற (உமக்கு) நமோ நமஃ = நமஸ்காரம், நமஸ்காரம்.

(தா - ம்) தன்னை உபாசிக்காதவர்களுக்கு அதிக பயங்கரரும், பராக்கிரமமுள்ளவருமான உமக்கு நமஸ்காரம், (சூரியன் ஒரு அரை நிமிஷத்

தில் இரண்டாயிரம் யோஜனை மைல் போகிறதென்பது புராணம் கூறுகிறது) ஆகையால் வெகுவேகமாய் செல்லும் உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம், இரவில் தாமரை மூடிக்கொண்டிருக்கும், பகலில் சூரியனுடைய வெளிச்சத்தை கண்டதும் தாமரை மலர்ந்துவிடும், தாமரையை மலரச்செய்கிற உமக்கு நமஸ்காரம், பிரளயகாலத்தில் உலகமனைவற்றையுமழித்து மறுபடியும் ஸ்ருஷ்டிக்கின்ற உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

ப்ரும்மேஶாநாச்யுதேஶாய ஸூர்யாயாதித்யவர்சஸே |

பாஸ்வதே ஸர்வபக்ஷாய ரௌத்ராய வபுஷே நமஃ ||

(ப - ரை) ப்ரும்மேஶாநாச்யுதேஶாய = பிரும்மா, சிவன், விஷ்ணு இவர்களுக்கு அதிபதியும், ஆதித்யவர்சஸே = ஆதித்யரூபமான ஒளியை உடையவரும், ஸூர்யாய =

Scanned by CamScanner

ஜனங்களை காரியத்தில் ஏவுகிறவரும். பாஸ்வதே = ஒளியையுடையவரும், ஸர்வபக்ஷாய = அனைவற்றையும் ஸம்ஹரிப்பவரும் ஆகையால், ரௌத்ரய = அச்சமபத்தில் பயங்கரருமான, வபுஷே = சரீரமுடைய (உமக்கு), நமஃ = நமஸ்காரம்.

(தா - ம்) "அஸாவாதித்யோப்ரஹ்ம" என்றசுருதியால் சூரியனை பரப்பிரும்மமாக பாவித்து பிரும்மோமாச்யுதேமாய என்பதால் ஸ்துதிக்கின்றார் பிரும்மா, சிவன், விஷ்ணு இவர்களுக்கும் தலைவரும், ஆதித்யரூபமான ஒளியையுடையவரும், ஜனங்களைத் தன் தன் காரியத்தை செய்வதில் ஏவுகிறவரும், மிகவும் ஒளியையுடையவரும், பிரளயத்தில் அனைவற்றையும் ஸம்ஹரிப்பவரும், அச்சமபத்தில் அதிக பயங்கரமான உருவம் கொண்டவருமான உமக்கு நமஸ்காரம்.

தமோக்னய ஹிமக்னய ஶத்ருக்னயாமி
தாத்மனே |

க்ருதக்னக்னய தேவாய ஜ்யோதிஷாம்
பதயேநமஃ ||

(ப - ரை) தமோக்னய = இருளை போக்கடிப்பவரும், ஹிமக்னய = பனியை நசிக்க செய்பவரும், ஶத்ருக்னய = சத்துருக்களை வெல்லுகிறவரும், அமிதாத்மனே = அளவிட முடியாத மஹிமையை உடையவரும், க்ருதக்னக்னய = செய்த நன்றி மறந்தவனை கொல்லுகிறவரும், தேவாய = ஸ்வயம் பிரகாசிக்கிறவரும், ஜ்யோதிஷாம் = அக்னி முதலிய ஒளிகளுக்கு, பதயே = தலைவருமான (உமக்கு நமஃ நமஸ்காரம்.

(தா - ம்) இருளை போக்கடிப்பவரும், பனியை நசிக்க செய்கிறவரும், சத்துருக்களை அழிப்பவரும், அளவிடமுடியாத மஹிமையை உடையவரும் செய்த நன்றிமறந்தவனை கொல்லுபவரும், தனது ஒளியால் பிரகாசிக்கிறவரும்

Scanned by CamScanner

அக்னி முதலிய எல்லா ஒளிகளுக்கும் தலைவரு மான உமக்கு நமஸ்காரம்.

தப்தசாமீகராபாய வஹ்நயே விஶ்வகர் மணே |

நமஸ் தமோபிநிக்ன்ன்ய ருசயே லோகஸா க்ஷிணே ||

(ப - ரை) தப்தசாமீகராபாய = உருக் கின சுவர்ணத்திற்கு சமாணமான காந்தியை உடையவரும், வஹ்நயே = அக்னிஸ்வரூபி யும், விஶ்வகர்மணே = உலகத்தை படைப்ப் வரும், தமோபிநிக்ன்ன்ய = இருளை போக்கடிப் பவரும் அல்லது அஞானத்தை விலக்குகிற வரும், ருசயே = பிரகாசிக்கிறவரும், லோக ஸாக்ஷிணே = ஜனங்களின் கர்மங்களுக்கு ஸாக்ஷியாயுமுள்ள (உமக்கு), நமஃ = நமஸ் காரம்.

(தா - மீ) உருக்கின சுவர்ணத்திற்கு சமானமான காந்தியை உடையவரும், அக்கினி ரூபியாய் ஹவிஸை வஹிக்கிறவரும், உலகத்தை படைப்பவரும், ஜனங்களின் அஞ்ஞானத்தை வில க்குகிறவரும் இருளை போக்கடிப்பவரும், தனது ஒளியால் பிரகாசிக்கிறவரும், ஜனங்களின் உட் டகுந்து அவர்களின் புண்யபாபங்களுக்கு ஸாக்ஷி யாயிருப்பவருமான உமக்கு நமஸ்காரம்.

நாஶயத்யேஷ வை பூதம் ததேவ ஸ்ருஜதி ப்ரபுஃ |

பாயத்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ கப ஸ்திபிஃ ||

(ப - ரை) ஏஷவை = இவரே, பூதம் = உல கத்தை, நாஶயதி = அழிக்கிறார். ப்ரபுரேவ = சகலபிரபஞ்சத்திற்கு நியாமகரான இவ ரே, மறுபடியும், தத் = அவ்வுலகத்தை, ஸ்ரு ஜதி = ஸ்ருஷ்டிக்கிறார். ஏஷஃ = இவரே,

Scanned by CamScanner

கபஸ்திபிஃ = கிரணங்களால், பாயதி = உலர்த்துகிறார். ஏஷஃ = இவரே, தபதி = தபிக்க செய்கிறார். ஏஷஃ = இவரே, வர்ஷதி = மழை பெய்யவும் செய்கிறார்.

(தா - ம்) ஸகலபிரபஞ்சத்திற்கு நியாமகரான இந்த பகவான் உலகத்தை அழிக்கிறார், மறுபடியும் ஸ்ருஷ்டிக்குறார். தனது கிரணங்களால் உலர்த்துகிறார், தபிக்கவும் செய்கிறார் மழை பெய்யவும் செய்கிறார்.

ஏஷ ஸுப்தேஷு ஸர்வேஷு பூதேஷு பரிநிஷ்டிதஃ |
ஏஷ ஏவாக்னிஹோத்ரம் ச ப்பலம் சை வாக்னிஹோத்ரிணும் ||

(ப - ரை) ஏஷஃ இந்த பகவான் ஸர்வேஷு = எல்லா பூதேஷு = பிராணிகள், ஸுப்தேஷு = தூங்கும் போது, பரிநிஷ்டிதஃ = எங்கும் வியாபித்துக்கொண்டு (விழித்

துக்கொண்டு இருக்கிறார், ஏஷ ஏவ = இவரே, அக்னிஹோத்ரம்ச = அக்னிஹோத்ரரூபியாகவும், அக்னிஹோத்ரிணும் = அக்னிஹோத்ரம் செய்கிறவர்களுக்கு, பலம் = பலரூபமாகவும் (பலத்தை கொடுப்பவராகவும் ஆகிறார்.

(தா - ம்) எல்லா பிராணிகள் தூங்கும் போதுதான் எங்கும் வியாபித்துக்கொண்டு இவர் ஒருவரே விழித்துக்கொண்டிருக்கிறார். இவரை அக்னிஹோத்ரரூபியாகவும் அக்னிஹோத்ரம் செய்கிறவர்களுக்கு பலத்தையும் அளிக்கின்றார்.

தேவாஶ்ச க்ரதவஶ்சைவ க்ரதூனும் ப்பலமேவச |
யாநி க்ருத்யானி லோகேஷு ஸர்வ ஏஷ ரவிஃப்ரபுஃ ||

Scanned by CamScanner

(ப - ரை) தேவாஶ்ச = யாகதேவதைக
ளாகவும், க்ரதவஶ்சைவ = ஸோமம் முதலிய
யாகங்களாகவும், க்ரதூனும் = யாகங்களு
டைய, பலமேவச = பலமாகவும் (ஆகிறார்).
லோகேஷு = எல்லா உலகங்களில், யாநி =
எந்தெந்த, க்ருத்யாநி = கார்யங்கள் (இருக்
கின்றனவோ) அவைகளுக்கு ஸர்வஃ = ஸர்
வாத்மாவான, ஏஷஃ = இந்த, ரவிஃ = சூரிய
பகவானே, ப்ரபுஃ = நியாமகராக (இருக்
கிறார்)

(தா - ம்) முப்பத்துமூன்று கோடி யாகதேவ
தைகளாகவும், ஸோமயாகம்முதல் அசுவமேதம்
வரையிலுள்ள யாகங்களாகவும், யாகாதிகளின்
பலங்களான ஸ்வர்க்காதிகளாகவும், யாகங்களு
க்கு சாதனமான ருத்விக், யஜமானன், ஸமித்
ஆஜ்யம், பசு முதலியவைகள் யாதொன்றுண்டோ
அவைகள் எல்லாவற்றிற்கும் ஸர்வாத்மாவாய்
இந்த சூரியபகவானே நியாமகராயிருக்கிறார்.

இனி இந்த ஸ்தோத்திரத்தின் பலத்தை
கூறுகிறார்:—

ஏனமாபத்ஸு க்ருச்ரேஷு காந்தாரே
ஷ்வபயேஷ்வ ச |
கீர்தயன் புருஷஃ கஶ்சின் நாவஸீததி
ராகவ ||

(ப - ரை) ராகவ = ஓராம, கஶ்சித் = ஒரு
புருஷஃ = புருஷன், ஆபத்ஸு = ஆபத்துக்
களிலும், க்ருச்ரேஷு = கஷ்டங்களிலும்,
காந்தாரேஷு = காடுகளிலும், பயேஷு ச
= பயங்களிலும் ஏனம் = இந்த ஸ்தோத்தி
ரத்தை, கீர்த்தயன் = கீர்த்தனம் பண்ணு
வானே (அவன்), நாவஸீததி = வருத்தம
டையமாட்டான்.

(தா - ம்) ஓ ராமா, எவனொருவன் தன
ஆபத்துக்காலத்திலும் கஷ்டகாலத்திலும், பய
முண்டாகக்கூடிய இடங்களிலும், காடுகளிலும்
இந்த ஆதித்யஹிருதயத்தை ஸ்துதி பண்ணுவானு
கில் கொஞ்சங்கூட வருத்தமடையவேமாட்டான்.

Scanned by CamScanner

பூஜயஸ்வைநமேகாக்ரோ தேவதேவம்
ஜகத்பதிம் |
ஏதத் த்ரிகுணிதம் ஜப்த்வா யுத்தேஷு
விஜயிஷ்யஸி ||

(ப - ரை) ஏகாக்ரஃ = ஒரேவிஷயத்தில் மனப்பற்றுதலுடையவனுய், தேவதேவம் = தேவர்களுக்கும் தேவரான, ஜகத்பதிம் = எல்லா உலகத்துக்கு ப்ரபுவான, ஏனம் = இந்த பகவானை, பூஜயஸ்வ = பூஜை செய்வாயாக, ஏதத் = இந்த ஸ்தோத்திரத்தை, த்ரிகுணிதம் = மூன்று தடவை, ஜப்த்வா = ஜபித்து, யுத்தேஷு = யுத்தங்களில், விஜயிஷ்யஸி = ஜயிக்கப்போகிறாய்.

(தா - ம்) தேவர்களுக்கும் தேவரான எவ்வுலகத்துக்கும் ப்ரபுவான இந்த பகவானை ஒரே மனங்கொண்டு பூஜிப்பாயாக. இந்த ஆதித்யஹ்ருதயஸ்தோத்திரத்தை மூன்று தடவை, ஜபித்து யுத்தத்தில் நிச்சயமாய் ஜயத்தை அடைவாய்.

அஸ்மின் க்ஷணே மஹாபாஹோ ராவணம் த்வம் வதிஷ்யஸி ||
ஏவமுக்த்வா ததாகஸ்த்யோ ஜகாம சயதாகதம் ||

(ப - ரை) மஹாபாஹோ = ஓ நீண்டகையை உடையவரே, த்வம் = நீர், அஸ்மின் = இந்த, க்ஷணே = நிமிஷத்தில், ராவணம் = ராவணனை, வதிஷ்யஸி = கொல்லுவாய், ததா = அப்போதே, அகஸ்த்யஃ = அகஸ்தியர், ஏவம் = இவ்விதம், உக்த்வா = சொல்லி, யதாகதம் = வந்தவழியே, ஜகாம = போனர்

(தா - ம்) நீண்ட புஜங்களை உடைய ஓராமா நீ இந்த நிமிஷத்திலேயே இராவணனை கொல்வாயென்று அகஸ்தியர் இவ்விதம் சொல்லிவிட்டு வந்தபடியே சென்றுவிட்டார்.

ஏதச் ச்ருத்வா மஹாதேஜா நஷ்டசோகோ பவத்ததா |

Scanned by CamScanner

தாரயாமாஸஸு:ப்ரீதோ ராகவஃ ப்ரயதாத்மவான் ||

(ப - ரை) ததா = அப்பொழுது, மஹாதேஜாஃ = அதிக தேஜஸ்ஸை உடைய, ராகவஃ = ராமர், ஏதத் = இவ்வார்த்தையை, ஸ்ருத்வா = கேட்டு, நஷ்டஸோகஃ = ஒழிந்த மனக்கவலை உடையவராக, அபவத் = ஆனர். ஸுப்ரீதஃ = மிகவும் சந்தோஷங்கொண்டு ப்ரயதாத்மவான் = தெளிவான மனமுடையவராய், தாரயாமாஸ = தரித்தார்.

(தா - ம்) அதிக தேஜஸ்வியான ஸ்ரீராமர் இவ்வார்த்தையை கேட்டதும் தனது மனக்கவலைநீங்கி மிகவும் சந்தோஷங்கொண்டு மிகவும் பக்குவமுடன் இதை தரித்தார்.

ஆதித்யம் ப்ரேக்ஷ்ய ஜப்த்வா த்ரிஃ பரம் ஹர்ஷமவாப்தவான் |

த்ரிராசம்ய ஸுசிர் பூத்வா தனுராதாய வீர்யவான் ||

(ப - ரை) வீர்யவான் = மிக பராக்கிரமமுடைய, (ராமர்), த்ரிஃ = மூன்று தடவை, ஆசம்ய = ஆசமனஞ் செய்து, ஸுசிர் = பரிசுத்தராகி, பூத்வா = ஆகி, ஆதித்யம் = சூரியனை, ப்ரேக்ஷ்ய = பார்த்து, த்ரிஃ = மூன்று தடவை, ஜப்த்வா = ஜபித்து, தனுஃ = வில்லை ஆதாய = எடுத்து, பரம் = மிகவும், ஹர்ஷம் = சந்தோஷத்தை, அவாப்தவான் = அடைந்தார்.

(தா - ம்) மிகபராக்கிரமசாலியாகிய ஸ்ரீராமர் மூன்றுதடவை ஆசமனம் செய்து பரிசுத்தராகி சூரியனை பார்த்து ஆதித்யஹ்ருதயத்தை மூன்று தடவை ஜபித்து பராக்கிரமம் விருத்தி அடைந்து தான் வில்லை எடுத்து மறுபடியும் யுத்தம் செய்ய மிகவும் சந்தோஷமடைந்தார்.

ராவணம் ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்மா யுத்தாய ஸமுபாகமத் |

Scanned by CamScanner

ஸர்வயத்னேந மஹதா வதே தஸ்ய த்ருதோ பவத் ||

(ப - ரை) ராவணம் = ராவணனை, ப்ரேக்ஷ்ய = பார்த்து, ஹ்ருஷடாத்மா = சந்தோஷங்கொண்ட மனமுடையவராய், யுத்தாய = யுத்தத்தின் பொருட்டு, ஸமுபாகமத் = கிட்டே நெருங்கினர். மஹதா = மிகுந்த, ஸர்வயத்னேந = எல்லாவித முயற்சியால், தஸ்ய = அந்த இராவணனுடைய, வதே = சம்ஹாரத்தில், த்ருதஃ = நிச்சயங் கொண்டவராக அபவத் = ஆனர்.

(தா - ம்) ஸ்ரீராமர் ராவணனை பார்த்து மிகவும் சந்தோஷமடைந்து யுத்தம் செய்வதற்காக கிட்டே நெருங்கினர். மிகுந்த முயற்சியால் இராவணனை சம்ஹரிப்பதிலேயே மிகவும் நோக்கமுள்ளவராக யிருந்தார்.

அத ரவிரவதந் நிரீக்ஷ்ய ராமம்
முதிதமனஃ பரமம் ப்ரஹ்ருஷ்யமாணஃ |
நிஶீசரபதி ஸம்க்ஷயம் விதித்வா
ஸுரகணமத்யகதோ வசஸ் த்வரேதி ||

(ப-ரை) அத = பிறகு, ரவிஃ = சூரியன் ராமம் = ராமரை, நிரீக்ஷ்ய பார்த்து, முதிதமனஃ = சந்தோஷங்கொண்ட மனமுடையவராய், பரமம் = மிகவும், ப்ரஹருஷ்யமாணஃ = களிப்புற்று, நிஶிசரபதிஸம்க்ஷயம் = ராக்ஷஸாதிபதியான ராவணனை ஸம்ஹரிப்பதை, விதித்வா = தெரிவித்து (அனுக்ரஹித்து) ஸுரகணமத்யகதஃ = தேவகணங்களின் நடுவில் இருந்து கொண்டு, த்வர = (ராவண வதத்தைக் குறித்து) துரிதப்படும், இதி = என்ற, வசஃ = வார்த்தையை, அப்ரவீத் = சொன்னர்.

Scanned by CamScanner

7. கல்பத்ரயம், பிள்ளையார் சதுர்த்தி, வரலக்ஷ்மி நோன்பு, ஸரஸ்வதி பூஜை முதலிய (நான்காம் பதிப்பு) 0 4 0

8. ஸ்ரீ விஷ்ணுஸகஸ்ர நாமம்-த்வாதசநாம பஞ்சரம், ஸகஸ்ர நாமம், ஸகஸ்ரநாமாவளி, கிருஷ்ண அஷ்டோத்ரம், அஷ்டோத்ர நாமாவளி, ராம அஷ்டோத்ரம், வெங்கடேச அஷ்டோத்ரம் முதலியன அடங்கியது (நான்காம் பதிப்பு) கிளேஸ் பேபர் 0 4 0

ஷெரப் பேபர். 0 6 0

9. ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்தோத்ரம்—புஜங்க ஸ்தோத்ரம், அஷ்டோத்ரம், அஷ்டோத்ர நாமாவளி, ஷண்முக அஷ்டாவிம்சதி, நாமாவளி அடங்கியது 0 2 0

10. ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம் - இதில் லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம், ஸஹஸ்ரநாமாவளி, அஷ்டோத்ர ஸதநாம ஸ்தோத்ரம், நாமாவளி, லக்ஷ்மீ அஷ்டகம் லக்ஷ்மீஸ்தோத்ரம், அன்னபூர்ணாஷ்டகம் முதலியன இருக்கின்றன 0 6 0

11. ஸ்ரீலலிதா ஸகஸ்ரநாமம் (ஸ்ரீ ராஜராஜேஸ்வரி படத்துடன்) ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம், ஸஹஸ்ர நாமாவளி, அஷ்டோத்ர ஸ்தோத்ரம், நாமாவளி, ராஜராஜேஸ்வரி அஷ்டகம், திரிபுர ஸுந்தரி ஸ்தோத்ரம் முதலியன அடங்கியது (மூன்றும் பதிப்பு) 0 6 0

12. ஸ்ரீ சுப்ரமண்ய பூஜாவிதி (ஷண்முகன் படத்துடன்) இதில் மகாகணபதி பூஜை. ஸங்கல்பம், கலச பூஜை. முதலியன அஷ்டோத்ர சத நாமாவளி, ஷோடசநாம ஸ்தோத்ரம், நாமாவளி, கவச ஸ்தோத்ரம் முதலிய விஷயங்கள் உள. 0 3 0

13. புருஷ ஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம், பூஸூக்தம், துர்க்கா ஸூக்தம், ஸாந்தி பஞ்சகம். ருத்ரகவசம். (2-ம் பதிப்பு) 0 2 0

14. இந்திராக்ஷி சிவகவச ஸ்தோத்ரம் 0 2 0

16. ஸௌந்தர்ய லஹரி - ஆதிசங்கரர் அம்பாள் பேரில் இயற்றிய 100 சுலோகங்கள் 0 2 0

Scanned by CamScanner

17. பஜ கோவிந்தம் கோபிகாகீதை (இரண்டாம் பதிப்பு) 0 1 0

18. ஸ்ரீ ஸுப்ரமண்ய ஸகஸ்ரநாமம் — இதில் ஸகஸ்ரநாமம், ஸஹஸ்ர நாமாவளி, அஷ்டோத்ரம், மூல மந்திரஷ்டகம், பஞ்சரத்னம் முதலியன 0 6 0

19. ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்ரஸ்தோத்ரம் பதவுரை பொழிப்புரையுடனும், நாமாவளி, அஷ்டகம் முதலியனவும் கூடியது. (சிரோன்மணி விஸ்வநாத சாஸ்திரிகள் எழுதியது) 0 2 0

20. சிவானந்த லஹரி ஸ்ரீ ஆதிசங்கரர் பரமசிவன்பேரில் இயற்றியது. 0 2 0

21. யஜுர் உபாகர்மம் 0 2 0

22. நவக்ரஹ ஸ்தோத்ரம் 0 2 6

23. பூஜாராமாயணம் நாமராமாயணம் 0 1 0

24. அகிலாண்டேச்வரி அக்ஷரமாலிகா 0 1 6

25. யஜுஸ் ஸந்தியா பாஷ்யம் 0 5 0

26. சங்கராந்தி பூஜை கோபூஜை 0 2 0

ஜெனரல் டிரேடிங் கம்பெனி,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

Scanned by CamScanner